**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No:CC.211/2021**
**Prosecution Witnesses : 9**

| | | | |
|---|---|---|---|
| Name | : பிரதீபன் | Caste | : |
| Father 's Name | : வேலுச்சாமி | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(1 முதல் 3, 5 எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்)
**(09.02.2026)**

**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போது கள்ளிக்குடி காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 13.03.2021ம் தேதி இரவு 19.30 மணிக்கு நான் பணியில் இருந்த போது மதுரை மாவட்டம் கள்ளிக்குடி தாலுகா சிவரக்கோட்டையைச் சார்ந்த சோனையன் மனைவி கார்த்திஸ்வரி அடையாளம் தெரிந்த நபரால் தாக்கப்பட்டு அவரால் வரமுடியாத சூழ்நிலையில் அக்கா கோடீஸ்வரி என்பவர் மூலம் கொடுத்து அனுப்பிய புகார் மனுவை பெற்று கள்ளிக்குடி காவல் நிலைய மனு ரசீது எண். 62/2021 பதிவு செய்து சார்பு ஆய்வாளரின் பார்வைக்கு வைக்கப்பட்டது. சார்பு ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**1 முதல் 3, 5 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**.

சம்பவ நாளான 13.03.2021ம் தேதி புகார்தாரர் கொடுத்த புகாரில் சம்பவம் எத்தனை மணிக்கு நடைபெற்றது என்று சொல்லப்பட்டுள்ளது என்று சொன்னால் 15.30 மணிக்கு சம்பவம் நடந்ததாக சொல்லப்பட்டுள்ளது. ஆனால் என்னிடம் புகார் கொடுக்கப்பட்டது நேரம் இரவு 7.30 மணி என்றால் சரிதான். சம்பவயிடத்தில் இருந்து காவல் நிலையம் சுமார் 4 முதல் 5 கி.மீ.

இருக்கும் என்றால் சரிதான். ஒரு சம்பவம் நடைபெற்றது என்றால் புகார்தாரர் எங்கள் காவல் நிலையத்திற்கு வந்து நேரடியாக வந்து புகார் கொடுப்பார்கள் என்றும் அல்லது புகார்தாரர் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தாலும் எங்களுக்கு நேரடியாக தகவல் வரும் என்றால் சரிதான். அது மாதிரி எதுவும் நடக்கவில்லை என்றால் சரிதான். புகாரை கொண்டு வந்தவர் புகார்தாரருக்கு உடன் பிறந்த சகோதரி என்றால் சரிதான். பொதுவாக யார் பெயரில் புகார் கொடுக்கப்பட்டதோ அவர்களுக்கு தான் மனு ரசீது வழங்கப்படும் என்றால் சரிதான். இந்தவழக்கில் புகார்தாரர் நேரடியாக கொடுக்கவில்லை என்று சொன்னால் சரிதான். ஆனால் அவர்கள் மருத்துவமனையில் இருந்தார்கள். என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.1 ல் இடைச்செருகலான வரிகள் சேர்க்கபட்டும் அடித்தல் திருத்தத்துடன் காணப்படுகிறது என்றால் சரிதான். இந்த வழக்கின் இறந்துபோன 4 வது எதிரி கொடுத்த புகாரின் பேரில் இவ்வழக்கின் புகார்தாரர் மீதும் வழக்கு பதிவு செய்யப்பட்டது என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. என்னை எப்போது சார்பு ஆய்வாளர் விசாரித்தார் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை.

**மறுவிசாரணை**. இல்லை